BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# போக்குவரத்து செய்தல், தீத்தடுப்பு மற்றும் அவசர கால சேவைகள் ஆகியவை போன்ற, ப்ராம்ப்ட்டன் மாநகர துறையில் இருக்கும் வேலைவாய்ப்புக்கள் பற்றிய தொழில்பாதை கண்காட்சியை இம்மாநகரம் நிகழ்த்தவிருக்கிருக்கிறது.

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 7, 2020) – போக்குவரத்து செய்தல், தீத்தடுப்பு மற்றும் அவசரகால சேவைகள் போன்ற, ப்ராம்ப்ட்டன் மாநகர அமைப்பில் கிடைக்கவிருக்கின்ற வேலை வாய்ப்புகள் பற்றி தெரிந்து கொள்வதற்கான ஒரு சிறந்த வாய்ப்பை உபயோகித்துக்கொள்ள, ப்ராம்ப்ட்டன் மாநகரப் பணியாளர்களுடன் இணையுங்கள்: இது வரவிருக்கும் பிப்ரவரி 25 ஆம் தேதியன்று மாலை 3 மணி முதல் 8 மணி வரை கிறிஸ் கிப்ஸன் ரிக்ரியேஷன் (Chris Gibson Recreation Centre) மையத்தில் நடைபெறவுள்ளது.

ஒரு பேருந்தை இயக்குவது மற்றும் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பை அணைப்பது ஆகியவை இந்தத் துறையின் நன்கு தெரிந்த பணிகள் என்றபோதும், இந்தக் குழுவின் முக்கியமான வேறு பல பதவிகளும் பல எண்ணிக்கையில் உள்ளன. இந்த மாநகரமானது மெக்கானிக்குகள், முன்னின்று தீயணைப்பவர்கள், நிர்வாகிகள் ஆகியோரை பணியமர்த்துகிறது. தகவல் தொழில்நுட்பம், மேப்பிங் (இடம் தேடி கண்டுபிடித்தல்), வாடிக்கையாளர் சேவை, பொதுமக்களுக்கு விழிப்புணர்வுக் கல்வி மற்றும் பல பணி வாய்ப்புக்களும் உள்ளன.

மாநகரின் தொழிற்பாதைக் கண்காட்சியில் நீங்கள் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்:

- போக்குவரத்து செய்தல் மற்றும் தீத்தடுப்பு ஆகியவற்றில் இருக்கும் தொழில்பாதைகள் மற்றும் வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களைப் பற்றி அறியலாம்
- இந்தக் குழுக்களில் தற்போது பனியாற்றுபவர்களிடம் பல வீரக் கதைகளை நீங்கள் கேட்டறியலாம்
- உங்களைப் பற்றிய சுய விபரத்தை சிறப்பாக எடுத்துக் கூறும் வகையில் பட்டியலிடுவதற்கு இலவசமான ஒரு பயிற்சியில் பங்கு கொள்ளுங்கள் – உங்களைப் பற்றிய சுயவிபரப் பட்டியலைக் கொண்டு வாருங்கள்; இங்கிருக்கும் வல்லுனர்கள் அதற்கு மெருகேற்ற உதவுவார்கள்

தன்னுணர்வால் உந்தப்பட்ட பற்று மிக்க ஒரு குழுவுடன் சேர்ந்தால் பிரம்மாதமான சேவைகளைக் கொண்டு சேர்க்க முடியும். இப்படியான நிகழ்வு இந்த மாநகருக்கு புதிது; இப்படியான தொழிற்பாதை கொண்ட வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதில் இம்மாநகரம் பரவசம் கொள்கிறது.
கண்காட்சியின்போது உங்கள் சுயவிபரப் பட்டியலை இம்மாநகரம் ஏற்க முடியாமல் போனாலுமே கூட,

தகுதிகள் என்னென்ன, அவற்றுக்கான வேலை வாய்ப்புக்கள் யாவை, என்பது பற்றிய தகவல்களை, வேலை தேடுவோருக்கு பணியாளர்கள் வழங்குவார்கள்.

கிறிஸ் கிப்ஸன் ரிக்ரியேஷன் மையம் (Chris Gibson Recreation Centre) என்பது வில்லியம்ஸ் பார்க்வே (Williams Parkway)மற்றும் க்வீன் ஸ்ட்ரீட்(Queen Stree) ஆகியவற்றுக்கு இடையில் 125,மெக்லாஃப்லின் ரோடு (125 McLaughlin Road) இல் அமைந்திருக்கிறது.

**அறியவேண்டிய உண்மைகள்**

- 2020 ஆண்டு ஜனவரியில், கனடா நாட்டில் மிகச்சிறந்த 300 பணியமர்த்தும் நிறுவனங்கள் என, ஃபோர்ப்ஸ் (Forbes) பத்திரிக்கையினால் வரிசைப்படுத்தி வெளியிட்ட கனடா நாட்டின் மிகச்சிறந்த பணியமர்த்தும் நிறுவனங்கள் 2020 (Canada's Best Employers 2020), எனும் பட்டியலின் மூலம், ப்ராம்ப்ட்டன் நகரமும் அப்படியான நிறுவனங்களில் ஒன்று என அங்கீகாரம் செய்துள்ளது. மிக உயர்ந்த வரிசையில் இருக்கும் 50 அரசுத்துறை சேவை நிறுவன்ங்கள் எனும் பட்டியலில் இரண்டு அமைப்புக்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன; அவற்றில் இந்த மாநகரமும் ஒன்றாக இருக்கிறது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், ஐந்து ஆண்டுக்கால பணியிட பரவல்தன்மை மற்றும் வசப்படுத்திக் கொள்வதற்கான யுக்தி மற்றும் பணித்திட்டம் (Workplace Diversity and Inclusion Strategy and Work Plan) ஒன்றை ப்ராம்ப்ட்டன் மாநகரம் உருவாக்கியது . எவரையும் ஈடுபடச்செய்கின்ற, தனது சொந்த மக்களை வளர்ச்சிபெறச்செய்து கொண்டாடுகின்ற, மற்றும் பலதரப்பட்ட பணியாளர்களையும் தன்வசம் ஈர்த்துக்கொள்கின்ற வகையிலான கலாச்சாரத் தன்மை கொண்ட நிறுவனங்களை , போற்றி வளர்ப்பதற்கான வாய்ப்புக்களையும் இம்மாநகரம் அமைத்துக் கொடுக்கிறது.

**அறிஞர் மேற்கோள்கள்**

"நன்கு நிர்வாகம் செய்யப்படும் ஒரு நகரில் நவீனமான, பலதரப்பட்ட, அனைத்தும் அடங்கிய பணியாளர் குழு இருக்கும் – இதுவே ஐந்து ஆண்டுக்கால பணியிட பரவல்தன்மை மற்றும் வசப்படுத்திக் கொள்வதற்கான யுக்தி (Workplace Diversity and Inclusion Strategy) யின் முக்கிய அம்சமாகும். அப்படித்தான், ப்ராம்ப்ட்டன் மாநகர சமூகத்தினருக்கான சேவைப்பணியில் இருக்கும் பணிக்குழுவுடன் சேர்ந்து நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம் ."

- *பேட்ரிக் பிரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் மாநகரம்,*

"நமது குழுவானது நமது குடியிருப்புவாசிகளுக்கு பலன்களைச் சேர்ப்பிப்பதில் பரவசம் கொள்கிறது. நமது சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மக்களை ஈர்த்து நமது மதிப்புக்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் மாநகர பணியாளர்கள் செழிப்படையக்கூடிய ஒரு பணிச்சூழல் உருவாகிறது. ப்ராம்ப்ட்டன் மாநகரத்திற்கான ஒரு மாற்றத்தை உண்டாக்க உங்களுக்குள் ஒரு உந்துதல்

இருக்குமானால், முதன்முதலாக நடைபெறவிருக்கும் தொழிற்பாதைக்கான கண்காட்சிக்கு வந்திருந்து போக்குவரத்து செய்தல், தீத்தடுப்பு மற்றும் அவசரகால சேவைகளில் இருக்கும் வேலை வாய்ப்புக்கள் பற்றி தெரிந்து கொள்ள நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca